## சுருக்கம்

பள்ளிக் கல்வி– அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கும் விலையில்லா காலணி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### பள்ளிக் கல்வி(எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண்.11

நாள் : 18.01.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
தை : 4

படிக்கப்பட்டவை:–

1. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் திருத்திய வரவு செலவு திட்ட உரை நாள் 4.8.2011.

2. மாநிலத் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வித் திட்டம் கடிதம் எண். 1274/ஏ1/2011 நாள் 6.8.2011 மற்றும் 20.8.2011

– – – –

**ஆணை:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 4.8.2011 அன்று திருத்திய வரவு செலவு திட்ட உரையில் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார்கள்.

> "--அரசு /அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இலவசமாக ஒரு இணை காலணி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்."

2. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளின் மொத்த எண்ணிக்கையின்படி, விலையில்லா காலணி வழங்க ஆகும் மொத்த செலவு ஆகியவைகளை அனுப்பி வைக்குமாறு அனைவருக்கும் கல்வி இயக்கக மாநில திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதனடிப்படையில், அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநர் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 1 இணை காலணி ரூ.96 வீதம் 35,00,556 மாணவர்களுக்கு ரூ.33,60,53,376 செலவிலும் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 1 இணை காலணி ரூ.127 வீதம்

27,95,639 மாணவர்களுக்கு ரூ.35,50,46,153 செலவிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு 1 இணை காலணி ரூ.142 வீதம் 18,05,933 மாணவர்களுக்கு ரூ.25,64,42,486 செலவிலும் மொத்தம் 81,02,128 மாணவ மாணவியர்களுக்கு ரூ.94.76 கோடி செலவில் விலையில்லா காலணி வழங்க கருத்துரு அனுப்பியிருந்தார். இத்திட்டத்திற்கென 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில், ரூ.25.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க, மாநில திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தது. அதனடிப்படையில் 2011–2012ஆம் கல்வியாண்டில் அரசு/ அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 81,02,128 மாணவ மாணவியர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விலையில்லா காலணி வழங்கிட நிர்வாக ஒப்பளிப்பு வழங்கிடவும் அதற்கான செலவிற்கு ரூ.94.76 கோடி (ரூபாய் தொன்னூற்று நான்கு கோடியே எழுபத்தி ஆறு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக சரியான கொள்முதல் நடைமுறைகளை (Appropriate Procurement Procedure) பின்பற்றி காலணிகளை காலதாமதமின்றி கொள்முதல் செய்திட தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

5. மேலே பத்தி 3 –ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| அ.தொடக்கக் கல்வித் துறை | (ரூ. ஆயிரத்தில்) |
|---|---|
| 2202– பொதுக்கல்வி –01 தொடக்கக் கல்வி – 800 ஏனைய செலவு– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –JK பள்ளிச் செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல் –24 பொருள்களும் வழங்கலும் (து.தொ.கு.2202 –01–800–JK–2406) | 55,29,14 |
| 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன்–789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –JE பள்ளிச் செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல் –24 பொருள்களும் வழங்கலும் (து.தொ.கு.2225 –01–789–JE–2407) | 13,13,17 |

2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 02 பழங்குடியினர் நலன்–796பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –JX பள்ளிச் செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல்– 24 பொருள்களும் வழங்கலும்
(து.தொ.கு.2225 –02–796–JX–2403) 69,11

ஆ.பள்ளிக் கல்வித் துறை குறித்த செலவினம் கீழ்க்கண்டவாறு புதியதாக துவக்கப்படவிருக்கும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:–

2202– பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி – 800 ஏனைய செலவு– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –JS பள்ளிச் செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல் –24 பொருள்களும் வழங்கலும்
(து.தொ.கு.2202 –02–800–JS–2409) 20,51,66

2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 01 ஆதிதிராவிடர் நலன்–789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –JF பள்ளிச் செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல் –24 பொருள்களும் வழங்கலும்
(து.தொ.கு.2225 –01–789–JF–2405) 4,87,27

2202– பொதுக்கல்வி –02 இடைநிலைக் கல்வி – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் –JC பள்ளிச் செல்லும் சிறார்களுக்கு இலவசமாக காலணிகள் வழங்குதல் 24 பொருள்களும் வழங்கலும்
(து.தொ.கு.2202 –02–796–JS–2402) 25,65

6. மேலே குறிப்படப்பட்டுள்ள பள்ளிக் கல்வி துறை குறித்த புதிய கணக்குத் தலைப்புகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர், மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலராவார். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய கணக்குத் தலைப்புகளை கணக்குப் பதிவேடுகளில் தொடங்கிடுமாறு சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்கள்/ கரூவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

7. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் வரை இச்செலவினத்தை மேற்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. எனினும், 2011–2012 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகள் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இக்கூடுதல் செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும். 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவில் மேற்காணும் கூடுதல் செலவினை சேர்த்துக் கொள்ளுமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

8. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 02/DS(KM)/Edn-II/2011,நாள் 05.01.2012–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1363 (ஆயிரத்து முன்னூற்று அறுபத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி (ம) பயிற்சி இயக்குநர், சென்னை–6
**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலரின் தனிச் செயலர்,
பள்ளிக் கல்வித் துறை ,சென்னை–9
நிதித் (வரவு/செலவு/பொது–I,II)துறை, சென்னை–9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்